DEPOSITION OF WITNESS

CHAPTER CODE OF CIVIL PROCEDURE

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE (FTC), THENI.

# MCOP. No.67/2021

Deposition of Witness : PW2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.சீல முத்து | ஜாதி | : | -- |
| அப்பா பெயர் | : | ராமசாமி | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | -- |
| தாலுகா /மாவட்டம் | : | | வயது | : | /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.01.2025

**(சாட்சி ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டார்).**
**சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.**

**2 வது எ.ம.த.கு.வி.:**

கேள்வி : இந்த வழக்கில் சாட்சி சொல்வதற்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பானண வரவில்லை என்றாலும் மனுதார் கேட்டதன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளீர்கள் என்றால்?

பதில் : சரிதான்.

கேள்வி : இந்த விபத்து வழக்கு சம்பந்தமாக போலிசார் உங்களை விசாரித்தார்களா?

பதில் : ஆம்.

கேள்வி : விபத்தை எத்தனை அடி துாரத்தில் இருந்து பார்த்தீர்கள்?

பதில் : என் கடையில் இருந்து சுமார் 15 அடி துாரத்தில் விபத்து நடந்தது.

கேள்வி : விபத்து சமயத்தில் உங்கள் கடையில் வள்ளி, வாசகர் , வாசகர் மனைவி செல்வி, சந்திரசேகர், இந்த விபத்தில் இறந்து போன லூர்து ஆகியோர் கடையில் இருக்கும்போது லூர்து அமர்ந்து இருந்தாரா என்றால் ?

பதில் : சரக்கு வாங்கி நின்று கொண்டுருந்தார்.

கேள்வி : இந்த விபத்தில் லூர்தை தவிர வேறு யாருக்கும் காயம் ஏதும் ஏற்படவில்லை என்றால்?

பதில் : சரிதான்.

கேள்வி : உங்கள் கடைக்கு எதாவது சேதம் இருந்ததா?

பதில் : ஆம். கடை இடிந்து விட்டது.

கேள்வி : உங்கள் நிரூபண வாக்குமூலத்தில் படித்து கையெழுத்து போட்டீர்களா என்றால்?

பதில் : இல்லை, வக்கீல் படித்து காண்பித்து பிறகு செய்தேன்.

கேள்வி : உங்கள் முதல் விசாரணையில் கடையின் எந்த எந்த பகுதி சேதம் அடைந்தது என்று சொல்லியுள்ளீர்களா?

பதில் : இல்லை.

கேள்வி : விபத்தில் தொடர்புடைய டிராக்டருடன் ஜல்லி லோடு உடன் டிரைலரும் இருந்தது என்றால்?

பதில் : சரிதான்.

கேள்வி : வாகனத்தின் ஓட்டுநர் வாகனத்தை மெதுவாக மற்றும் கவனமாக இயக்கினார் என்றால்?

பதில் : சரியல்ல.

கேள்வி : லூர்தம்மாள் உங்கள் கடையில் பொருட்களை வாங்கி சாலையை கவனமில்லாமல் கடக்கும் போதுதான் விபத்து ஏற்பட்டது என்றால்?

பதில் : சரியல்ல.

கேள்வி : நீங்கள் உங்கள் கடையில் வரும் வாடிக்கையாளருகளுக்கு பொருட்களை எடுத்து கொடுத்து கொண்டுருந்தீர்கள் என்பதால் நீங்கள் விபத்தை பார்க்கவில்லை என்றால்?

பதில் : சரியல்ல.

கேள்வி : நீங்கள் மனுதாரருக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால்?

பதில் : சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 07.01.2025 அன்று செவ்வாய்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

GOPINATHAN S

Digitally signed by GOPINATHAN S
Date: 2025.01.07 19:01:32 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி. தேனி.
07.01.2025